

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.8.2025) சென்னையில் உடல்நலக் குறைவால் மறைவெய்திய நாகாலாந்து மாநில ஆளுநர் இல. கணேசன் அவர்களின் இல்லத்திற்கு நேரில் சென்று அவரது உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். இந்நிகழ்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஜெ.கருணாநிதி, த.வேலு ஆகியோர் உடனிருந்தனர்.

### எதிரிகளின் விமர்சனத்தைப் புறந்தள்ளி, மக்கள் நலனையே குறிக்கோளாக கொண்டு செயல்படுகிறார் முதல்வர்!

## சாமானிய மக்களின் ஆதரவு நாள்தோறும் பெருகி வருகிறது என்பதே நிதர்சனம்!

### “தினகரன்” நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

**சென்னை, ஆக. 17-**

**“அரசியல் எதிரிகளின் விமர்சனத்தைப் புறந்தள்ளி மக்களின் நலன் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு திறம்படச் செயலாற்றி வரும் தமிழக முதல்வருக்கு சாமானிய மக்களின் ஆதரவு நாள்தோறும் பெருகி வருகிறது” என “தினகரன்” நாளேடு தலையங்கத்தில் பாராட்டுத் தெரிவித்துள்ளது.**



தினகரன்

ஆகஸ்ட் 16, 2025 சனிக்கிழமை

பெருகும் ஆதரவு

நாட்டின் 79வது சுதந்திர தின விழாவில், சென்னையில் தேசிய கொடி ஏற்றி வைத்து, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் 9 முக்கிய அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார். நாட்டின் விடுதலைக்காக போராடிய தியாகிகளுக்கான ஓய்வூதியம் ரூ.22 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும், தியாகிகளுக்கான குடும்ப ஓய்வூதியம் ரூ.12 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும். வீரபாண்டிய கட்டபொம்மன் வழித்தோன்றல்கள், முன்னாள் ராமநாதபுரம் மன்னர் முத்துராமலிங்க விஜய ரகுநாத சேதுபதியின் வழித்தோன்றல்கள், சிவகங்கை மருது சகோதரர்களின் வழித்தோன்றல்கள் ஆகியோர் பெற்று வரக்கூடிய மாதாந்திர ஓய்வூதியம் ரூ.11 ஆயிரமாக உயர்த்தப்படும்.

இரண்டாம் உலகப்போரில் பங்கேற்ற தமிழகத்தை சேர்ந்த முன்னாள் படை வீரர்களுக்கு வழங்கப்படும் ஆயுட்கால மாதாந்திர நிதி உதவி ரூ.15 ஆயிரமாக உயர்த்தப்படும். இரண்டாம் உலகப்போரில் பங்கேற்ற வீரர்களின் கைம்பெண்களுக்கு வழங்கப்படும் ஆயுட்கால மாதாந்திர நிதி உதவி ரூ.8 ஆயிரமாக உயர்த்தப்படும்.

நாட்டின் 79வது சுதந்திர தின விழாவில், சென்னையில் தேசிய கொடி ஏற்றி வைத்து, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் 9 முக்கிய அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார். நாட்டின் விடுதலைக்காக போராடிய தியாகிகளுக்கான ஓய்வூதியம் ரூ.22 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும், தியாகிகளுக்கான குடும்ப ஓய்வூதியம் ரூ.12 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும். வீரபாண்டிய கட்டபொம்மன் வழித்தோன்றல்கள், முன்னாள் ராமநாதபுரம் மன்னர் முத்து ராமலிங்க விஜய ரகுநாத சேதுபதியின் வழித்தோன்றல்கள், சிவகங்கை மருது சகோதரர்களின் வழித்தோன்றல்கள் ஆகியோர் பெற்று வரக்கூடிய மாதாந்திர ஓய்வூதியம் ரூ.11 ஆயிரமாக உயர்த்தப்படும்.

இரண்டாம் உலகப்போரில் பங்கேற்ற தமிழகத்தைச் சேர்ந்த முன்னாள் படை வீரர்களுக்கு வழங்கப்படும் ஆயுட்கால மாதாந்திர நிதி உதவி ரூ.15 ஆயிரமாக உயர்த்தப்படும். இரண்டாம் உலகப்போரில் பங்கேற்ற வீரர்களின் கைம்பெண்களுக்கு வழங்கப்படும் ஆயுட்கால மாதாந்திர நிதி உதவி ரூ.8 ஆயிரமாக உயர்த்தப்படும்.

முன்னாள் படை வீரர்களுக்கு தங்கும் விடுதிகள் ரூ.22 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும், தமிழகத்தில் மலைப் பகுதிகளில் கட்டணம் இல்லா விடியல் பயணத்திட்டம் மாற்றுத்திறனாளிகளுக்கும் விரிவாக்கம் செய்யப்படும். ஓட்டுநர் பயிற்சி பெற மாநில அளவில் பயிற்சி மையம், மண்டல அளவில் இரு பயிற்சி மையங்கள் மற்றும் மாவட்டத்துக்கு ஒரு ஓட்டுநர் பயிற்சி பள்ளி ஆகியவை தொடங்கப்படும்.

தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவுசெய்த தொழிலாளர்களின் குழந்தைகள் 10,000 பேருக்கு ரூ.15 கோடியில் இணைய வழியில் திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கப்படும். இப்படி, முத்தான ஒன்பது முக்கிய அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார்.

கடந்த இரு தினங்களுக்கு முன்பு தூய்மைப்பணியாளர்கள் மேம்பாட்டுக்கான 6 அறிவிப்புகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார். அதாவது, தூய்மைப்பணியாளர்களின் தொழில்சார் நோய்களை கண்டறியவும், சிகிச்சை அளிக்கவும் தனித்திட்டம், தூய்மைப் பணியாளர்கள் பணியின்போது உயிரிழந்தால், ரூ.10 லட்சம் இழப்பீடு, அவர்களின் குடும்பங்களுக்கு கூடுதலாக ரூ.5 லட்சம் காப்பீடு, தூய்மைப்பணியாளர்கள் சுயதொழில் தொடங்கும்போது அதிகபட்சமாக ரூ.3.50 லட்சம் மானியம், தூய்மைப்பணியாளர்களின் குழந்தைகளுக்காக புதிய உயர்கல்வி உதவித்தொகை திட்டம், நகர்ப்புறங்களில் சொந்த வீடு இல்லாத தூய்மைப் பணியாளர்களுக்கு 30 ஆயிரம் குடியிருப்புகள், நகர்ப்புற தூய்மைப்பணியாளர்களுக்கு காலை உணவு திட்டம் என அதிரடியாக 6 அறிவிப்புகளை வெளியிட்டார்.

இப்படி ஒவ்வொரு சமுதாய மக்களும் தங்களது வாழ்வில் மேம்பட நாள்தோறும் புதுப்புது அறிவிப்புகளை முதல்வர் வெளியிட்டு வருகிறார். இதுவே, மக்கள் நலன் காக்கும் `திராவிட மாடல்’ அரசு என்பதை மீண்டும் நிரூபித்து காட்டியுள்ளார்.

ஒன்றிய அரசின் கொள்கை மிரட்டல் ஒருபுறம், நிதி மறுப்பு நடவடிக்கை இன்னொருபுறம் என அடுத்தடுத்து மிரட்டல்கள் வந்தாலும் அஞ்சாமல் நடைபோடுகிறார் தமிழக முதல்வர். தனது வலுவான நிதி மேலாண்மை மூலம் தமிழகத்தில் அனைத்து துறையையும் மேம்படுத்தி வருகிறார். சுமார் 10 ஆண்டுகளுக்கு பிறகு தமிழகத்தின் ஜி.டி.பி. வளர்ச்சியை இரட்டை இலக்கத்திற்கு உயர்த்தி பிடித்துள்ளார். அரசியல் எதிரிகளின் விமர்சனத்தை புறந்தள்ளி, மக்கள் நலன் ஒன்றையே குறிக்கோளாக கொண்டு திறம்பட செயலாற்றி வரும் தமிழக முதல்வருக்கு சாமானிய மக்களின் ஏகோபித்த ஆதரவு நாள்தோறும் பெருகி வருகிறது என்பதே நிதர்சனம்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஏடாகி வாழ்க்கை தந்து, ஏனடா மாறன் சென்றார்?






திங்களைக் குழைத்த தேகம்!
　தீக்கதிர் கனன்ற நெஞ்சம்!
பொங்குறு சிங்கத் தோற்றம்!
　புதுப்புனல் பாயும் வேகம்!
வங்கத்துச் சுபாசு போல
　வணங்காத கொள்கை ஊக்கம்!
மங்காத கழகங் கண்ட
　மாவீரன் மாறன் தானே!

கழகத்தின் இதயம் காக்க
　தன்னித யநோய்ம றந்தான்!
நிழல்தரு இயக்கம் போற்ற
　நீளுடல் உயிரை யீந்தான்!
சுழன்றிடு தேனீ போன்றே
　சுடரொளி தந்தே நின்றான்!
உழன்றிடு மக்கள் மீட்க
　உழைத்தவன் மாறன் தானே!

துன்பங்கள் வந்த போதும்
　துவண்டிடாத் தோள்கள் கொண்டான்!
இன்புறு காட்சி கண்டே
　இருமாந்தி ருக்க மாட்டான்!
அன்பர்கள் அணுகி வந்தால்,
　அடிநாவால் சுடவும் மாட்டான்!
தென்மொழி யினத்தைப் போற்ற
　தன்முகங் காட்டி நின்றான்!

மண்டிய இருளை யெல்லாம்
　மணித்திரு விளக்காய் நின்று
வண்ணங்கொள் மேன்மை செய்தான்!
　வாழ்வெலாம் கழக மென்றே
எண்ணத்திற் கலைஞர் கொண்டான்!
　இலட்சியம் உயிர்மூச் சென்றான்!
உண்மையே தொண்டென் றெண்ணி
　உணர்த்திய வீரன் தானே!

இடர் பல வந்த போதும்
　இடம்பெய ராத தொண்டன்!
குடம்நிறை தேனைப் போன்றே
　கருத்துகள் மொண்டு தந்தான்!
சுடர்மொழித் தமிழில் நல்ல
　சுவைதரும் நூல்கள் நெய்தான்!
கடற்சிப்பி முத்து போலக்
　கழகத்தை அணிதான் செய்தான்!

எரிமலை பகைவர் முன்பாம்
　எதிர்ப்பதில் குறைகள் கண்டால்
பெரியாரின் கொள்கைத் தீர்ப்பு!
　பகுத்தறி வொளிப ரப்பும்
வரிப்புலித் துடிப்பு ! மாமன்
　வழிவந்த கலைஞர் வார்ப்பு !
சரித்திரம் படைத்த அன்னோன்
　திராவிடக் காளை அன்றோ!

நாடாளு மன்றந் தன்னில்
　நாட்டுப்ப ணியாற்றி நின்றும்
வீடான கழகந் தன்னில்
　விளக்கொளி வீசி நின்றும்
காடான சமுதா யத்தைச்
　சீர்திருத் தங்கள் செய்தும்
ஏடாகி வாழ்க்கை தந்தே
　ஏனடா மாறன் சென்றார்?

சூரியப் பாதை மீது
　சுழலும் பூமி போன்றே
வீரியக் கொள்கைக்காக
　வலிவுடைக் கலைஞ ரோடே
ஆரியப் படையை வீழ்த்த
　அணிவகுத் தஅட லேறாம்!
காரிருள் நீக்கி வென்ற
　கன்றைநாம் மறக்க லாமோ!

கவிஞர்
**தமிழ்தாசன்**
- கழகத் தீர்மானக் குழுத் தலைவர்



## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கே.ஏ. மதியழகன்
### ஆகஸ்ட் 17 (1983)



தந்தை பெரியார், அறிஞர் அண்ணா ஆகியோர் வழிநடந்த தன்மான தளகர்த்தர். தலைவர் கலைஞர் அவர்களது உடன்பிறப்பு, நாற்பதாண்டு காலத்திற்கு மேலாக திராவிடர் நலம்நாடி உழைத்த பெருமகனார்.

இயக்கப் பணியிலும், அறப்போராட்டத்திலும் முன்னின்று செயலாற்றி மாணவர்களுக்கும், இளைஞர்களுக்கும் வழிகாட்டியாக விளங்கியவர்.

தமிழக அமைச்சராகவும், சட்டப்பேரவைத் தலைவராகவும் பணியாற்றியவர்.

“தமிழ் இனம் காக்க – மொழி காக்க தடந்தோள் உயர்த்திய தளபதி” என தலைவர் கலைஞர் அவர்கள் இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. இளைஞரணி சார்பில் கலைஞர் 7 ஆம் ஆண்டு நினைவு நாள்!

### புழல் எம். நாராயணன் அறுசுவை உணவு வழங்கினார்!

மாதவரம், ஆக. 17-

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி திமுக இளைஞர் அணி சார்பில், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் ஏழாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கப் பட்டது.

மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. இளைஞரணி சார்பில் பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் எலந்தனூர் வி. சிவபிரகாஷ் ஏற்பாட்டில் 16வது வட்டம் ஆண்டார்குப்பம் செக் போஸ்ட் பகுதியில், முத்தமிழ் அறிஞர் கலைஞரின் அலங்கரித்து வைக்கப்பட்ட திரு உருவப்படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தி 300 பேருக்கு அறுசுவை உணவு வழங்கப்பட்டது.

சென்னை வடகிழக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர். டி. மதன்குமார் தலைமையில், இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் சி. எஸ். எஸ். டி . சீனிவாசன, 16வது வட்டச் செயலாளர் இ. கண்ணப்பன், கவுன்சிலர் ஆ. ராஜேந்திரன், பகுதி இளைஞரணி அமைப்பாளர் ர. விஜய் ஆனந்த், துணை அமைப்பாளர்கள் எம். என். அஜய் தென்னவன், டோமினிக் பிரான்சிஸ் தேவராஜ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த முத்தமிழ் அறிஞர் கலைஞரின் திருவுருவப் படத்திற்கு கழகத்தினரும், பொதுமக்களும் மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்கள்.

பின்பு 300க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு அறுசுவை சைவ உணவு வழங்கப்பட்டது. மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் கலந்து கொண்டு அறுசுவை உணவை பொதுமக்களுக்கு வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் எஸ். கருணாகரன்,பகுதி பிரதிநிதிகள் கே. எ. ரமேஷ், சி. முத்தையா, வழக்கறிஞர் இ. வெங்கடேசன், பகுதி மகளிர் தொண்டர்அணி துணை அமைப்பாளர்கள் சாந்தி, பார்கவி, மணலி புதுநகர் சி. எம். ராஜா, சடையங்குப்பம் நைனியப்பன்,பர்மா நகர் தினேஷ் சங்கர், நித்யானந்தம், செமின் எடிசன், செபின்எடிசன், ரூப்குமார், மகாலட்சுமி உள்ளிட்ட கழகத்தினர் பலர் கலந்து கொண்டார்கள்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஜி. ஆனந்தன்
### ஆகஸ்ட் 17 (2010)



நீதிக் கட்சி தொடங்கி தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் பேச்சாற்றலாலும் இளமைப் பருவத்தில் தன்னை கழகத்தில் இணைத்துக் கொண்டவர்.

35 ஆண்டுகாலம் தொடர்ந்து பி.என்.பாளையம் ஊராட்சிச் செயலாளராகவும், ஊராட்சி மன்ற உறுப்பினராகவும், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கித் தலைவராகவும் பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

இரயில் மறியல் போராட்டம், சட்டநகல் எரிப்புப் போராட்டம், இந்தி எதிர்ப்புப் போராட்டம், மும்முனைப் போராட்டம் ஆகிய போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**